بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 4

இதழ் 11

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

06 ரஜப் 1440 ஹிஜ்ரி கமரி 14 அமான் 1398 ஹிஜ்ரி ஷம்ஸி 14 மார்ச் 2019

## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَآ اٰمَنَّا بِمَآ اَنْزَلْتَ وَاتَّبَعْنَا الرَّسُوْلَ فَاكْتُبْنَا مَعَ الشّٰهِدِيْنَ

எங்கள் இறைவா! நீ இறக்கியதில் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். மேலும் இத்தூதரைப் பின்பற்றுகிறோம். எனவே நீ எங்களைச் சாட்சியாளர்களுடன் பதிவு செய்வாயாக. (3:54)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இந்த உலகம் என்ன? ஒரு விதமான சோதனையின் வீடாகும். ஒவ்வொரு விஷயத்தையும் மறைவாக வைத்திருப்பவரும், வெளிப்படுத்திக் காட்டுவதிலிருந்து விலகியிருப்பவருமே சிறந்தவராவார். எவர்களது செயல்கள் அல்லாஹ்வுக்காக இருக்குமோ அவர்கள் எவர் மீதும் தமது செயல்களை வெளிப்படுத்த விடமாட்டார்கள். அத்தகைய மக்களே இறையச்சயமுடையவர்கள் ஆவர்**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இந்தத் தகுதியை அவர் கடந்து விட்டால் பிறகு அவர் உண்மையான அடியாராக ஆகி விடுகின்றார். இவ்வாறு துன்பம் அவரை விட்டு நீங்கி அவர் இயல்பாகவே நன்மை செய்பவராகி விடுகிறார். மேலும் அவர் ஒரு விதமான அமைதியின் வீட்டில் இருக்கிறார். அவ்வீட்டிற்கு எந்த அபாயமும் கிடையாது. இப்போது தமது நஃப்ஸிற்கு எதிரான அனைத்துப் போர்களும் முடிவுற்று அவர் பாதுகாப்பில் வந்து விட்டார். மேலும் அவர் எல்லா விதமான அபாயத்திலிருந்தும் தூய்மையாகி விட்டார். இதனையே நமது வழிகாட்டியும், முழுமை பெற்ற நபியுமான (ஸல்) அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஒவ்வொருவருடனும் ஷய்த்தான் இருக்கின்றான். ஆனால் எனது ஷய்த்தான் முஸ்லிமாகி விட்டான்.

எனவே இறையச்சயமுடையவர்களுக்கு ஷய்த்தானோடு எப்போதும் போர் செய்ய வேண்டியதுள்ளது. ஆனால் எப்போது அவர் சாலிஹாக ஆகி விடுகின்றாரோ அப்போது அனைத்துப் போர்களும் முடிவுறுகிறது. எடுத்துக்காட்டாக, வெளிப்படுத்திக் காட்டும் தன்மை இருக்கிறது. அதனுடன் அவன் நீண்ட காலமாக போர் புரிகின்றான். இறையச்சமுடையவர் எத்தகை களத்தில் இருக்கின்றார் என்றால் அங்கு எல்லா நேரமும் சண்டையே நடக்கின்றது. அல்லாஹ்வின் அருளின் கை அவருடன் இருக்குமென்றால் பிறகு அவருக்கு வெற்றி கிடைக்கின்றது. வெளிப்படுத்திக்காட்ட வேண்டும் என்று எண்ணுபவரின் உட்காருவதும் அமருவதும் ஒரு எறும்பைப் போன்றதாக இருந்தும் சில நேரங்களில் மனிதன் புரிந்து கொள்ளாமல் தமது உள்ளத்தில் அதற்கு இடமளித்து விடுகின்றான்.

உதாரணமாக, ஒருவரது கத்தி தொலைந்து விட்டால் பிறகு அவர் இன்னொருவரிடம் அதனைக் கேட்டால் அத்தகைய தருணத்தில் இறையச்சமுடையவருக்கு ஷய்த்தானுடன் போர் ஆரம்பித்து விடுகிறது. அந்த இறையச்சமுடையவர், அந்த நபரிடம் கத்தியை வேண்டுவது ஒரு விதமாக கண்ணியக்குறைவாகும் என்று அவருக்கு புரிய வைக்கின்றார். இவ்வாறு கூறுவதனால் இருவருக்குமிடையில் சண்டைகள் கூட ஏற்பட வாய்ப்புள்ளது. அந்த சந்தர்ப்பத்தில் ஒரு இறையச்சமுடையவர் தனது நஃப்ஸின் தீய விருப்பத்திற்கு எதிராகப் போர் நடைபெறுகின்றது. அந்த நபரிடம் உண்மை இருக்குமென்றால் பிறகு அவர் கோபப்படுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டு விட்டது.

உதாரணமாக, வழிப்போக்கர் ஒருவருக்கு வழிப்பாதையில் சில திருடர்கள் கிடைத்து அந்தத் திருடர்கள் ஆலோசனை செய்து சிலர் தம்மை செல்வந்தர்கள் என்றும், சிலர் தம்மை ஒன்றுமற்றவர்கள் என்றும் கூறினால் இவ்விருவரில் ஒன்றுமற்றவன் என்று தம்மை வெளிப்படுத்திக் காட்டுபவர்களை அவர் விரும்ப மாட்டார்.

### செயல்களிலேயே மறைவாக செய்பவையே சிறந்ததாகும்

அவ்வாறே இந்த உலகம் என்ன? ஒரு விதமான சோதனையின் வீடாகும். ஒவ்வொரு விஷயத்தையும் மறைவாக வைத்திருப்பவரும், வெளிப்படுத்திக் காட்டுவதிலிருந்து விலகியிருப்பவருமே சிறந்தவராவார். எவர்களது செயல்கள் அல்லாஹ்வுக்காக இருக்குமோ அவர்கள் எவர் மீதும் தமது செயல்களை வெளிப்படுத்த விடமாட்டார்கள். அத்தகைய மக்களே இறையச்சயமுடையவர்கள் ஆவர்.

நான் தத்கிரத்துல் அவ்லியாவில் பார்த்துள்ளேன். அதாவது ஒரு சபையில் ஒரு பெரியவர், தனக்குப் பணத்தின் தேவை இருக்கிறது. யாராவது தனக்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டார். ஒரு நபர் இவரை நல்லவர் என்று நினைத்துக் கொண்டு ஆயிரம் ரூபாயைக் கொடுத்தார். பணத்தைப் பெற்றுக் கொண்டு அவரது வள்ளல் தன்மையை அவர்கள் புகழ்ந்து கூறினர். எனவே இதனால் பணம் கொடுத்தவர், இங்கேயே நம்மைப் புகழ்ந்து கூறி விட்டால் பிறகு மறுமை நமக்கு கிடைக்காமல் போகலாம் என்று வருத்தமடைந்தார்.

பிறகு சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் திரும்பி வந்து அந்த பணம் எனது தாயுடையது. அவர் கொடுக்க விரும்பவில்லை என்று கூறினார். எனவே அந்த பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. எனவே ஒவ்வொருவரும் அவரை சபித்தார்கள். மேலும் இவர் பொய்யர். உண்மையில் இவர் பணத்தைக் கொடுக்க விரும்பவில்லை என்றும்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கஃபாவைத் தவிர எனது இந்தப் பள்ளிவாசலில் தொழுவது மற்ற பள்ளிவாசல்களில் தொழுவதை விட ஆயிரம் மடங்கு சிறந்ததாகும்**

**சஹாபாக்களின் சம்வங்களை எடுத்துக் கூறும்போது அத்துடன் சில பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைத்து விடுகிறது**

**கட்டுப்படுதல் மற்றும் கலப்பற்றத் தன்மை ஆகியவற்றை கொண்டிருந்த, பத்ர் போரில் பங்குபெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் அபூ முலைல் பின் அல் அஸ்அர் (ரலி), ஹஸ்ரத் அனஸ் பின் மஆஸ் அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் அபூ ஷேக் அபீ பின் சாபித் (ரலி), ஹஸ்ரத் அபூ புர்தா பின் நியார் (ரலி), ஹஸ்ரத் அஸ்அது பின் யஸீத் (ரலி), ஹஸ்ரத் தமீம் பின் யஆர் அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாபித் பின் முன்ஸிர் (ரலி), ஹஸ்ரத் சாபித் பின் ஹன்ஸா (ரலி), ஹஸ்ரத் அவ்ஸ் பின் அஸ்ஸாமித் (ரலி), ஹஸ்ரத் அர்கம் பின் அபீ அர்கம் (ரலி), ஹஸ்ரத் பஸ்பஸ் பின் அம்ர் (ரலி), ஹஸ்ரத் சஃலபா பின் அம்ர் அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் சஃலபா பின் கனமா (ரலி), ஹஸ்ரத் ஜாபிர் பின் காலித் (ரலி), ஹஸ்ரத் ஹாரிஸ் பின் நுஃமான் பின் உமைய்யா அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அனஸ் அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் ஹுரைஸ் பின் ஸைது அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அஸிம்மா (ரலி) ஆகியோர்களைப் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்புகள்**

**அல்லாஹ் இந்த அனைத்து பத்ர் போர் சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 08 பிப்ரவரி 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **08 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

நான் இன்று எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபாக்களில் முதலாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அபூ முலைல் பின் அல் அஸ்அர் (ரலி) ஆகும். இவர்களின் தாயாரின் பெயர் உம்மே அம்ர் பின்த் அஷ்ரஃப் ஆகும். மேலும் இவர் அன்ஸார்களின் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர்களுக்கு பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொள்வதற்கான நற்பேறு கிடைத்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 353 அபூ முலைல் பின் அல் அஸ்அர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 295 அபூ முலைல் பின் அல் அஸ்அர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இவர்களின் சகோதரர் அபூ ஹபீப் பின் அஸ்அர் அவர்களும் பத்ர் மற்றும் பிற போர்களின் கலந்து கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 65 அபூ ஹபீப் பின் அஸ்அர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்ததாக ஹஸ்ரத் அனஸ் பின் முஆஸ் அன்ஸாரி (ரலி) அவர்களுடையதாகும். சில அறிவிப்புகளில் அன்னாரின் பெயர் உனைஸ் என்றும் வந்துள்ளது. அவர்கள் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ நஜ்ஜாரைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னாரின் தாயாரின் பெயர் உம்மே உனாஸ் பின்த் காலித் ஆகும். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு கலந்து கொண்டார்கள். உஹது போரில் அன்னாரது சகோதரர் ஹஸ்ரத் அபீ பின் முஆஸ் அவர்களும் அன்னாருடன் கலந்து கொண்டார்கள். இவர்களின் வஃபாத் தொடர்பாகக் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள் என்றும் பிற அறிவிப்பில் ஹஸ்ரத் அனஸ் பின் முஆஸ் மற்றும் அவரது சகோதரர் உபய் பின் முஆஸ் இருவரும் பிஃரே மவூனாவில் ஷஹீதானார்கள் என்றும் வந்துள்ளது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 381 அனஸ் பின் முஆஸ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 299 அனஸ் பின் முஆஸ் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்ததாக ஹஸ்ரத் அபூ ஷேக் உபய் பின் சாபித் (ரலி) உடையதாகும். ஹஸ்ரத் உபய் பின் சாபித் அவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ அதீயைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அவர்களின் சுட்டுப்பெயர் அபூ ஷேக்காக இருந்தது.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இந்தச் சுட்டுப்பெயர் அன்னாரது மகனுடையதாகும் என்று வருகிறது. அவர்களின் தாயாரின் பெயர் சக்தா பின் ஹாரிஸா ஆகும். ஹஸ்ரத் உபய் பின் சாபித், ஹஸ்ரத் ஹஸ்ஸாம் பின் சாபித் (ரலி) மற்றும் அவ்ஸ் பின் சாபித் (ரலி) அவர்களின் சகோதரர் ஆவார். அன்னார் பத்ர் மற்றும் உஹது போரில் கலந்து கொண்டார்கள். பிஃரே மவூனா சந்தர்ப்பத்தில் அன்னார் வஃபாத்தானார்கள். ஹஸ்ரத் உபய் பின் சாபித் பத்ர் போரில் கலந்து கொண்டாரா? இல்லையா? என்பது தொடர்பாகவும் கருத்து வேறுபாடு உள்ளது.

வரலாற்றின் பல்வேறு நூல்களில் இப்னு இஸ்ஹாக் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உபய் பின் சாபித் இஸ்லாத்திற்கு முந்தைய காலகட்டத்திலேயே வஃபாத்தாகி விட்டார்கள். பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டது அவர்களது மகன் அபூ ஷேக் பின் உபய் பின் சாபித் ஆகும்.

ஆனால் அல்லாமா இப்னு ஹிஷாம் அவர்கள் பத்ர் போரில் கலந்து கொண்டவர்களில் ஹஸ்ரத் அபூ ஷேக் உபய் பின் சாபித் அவர்களையும் சேர்த்துள்ளார்கள். ஹஸ்ரத் அபீ பின் சாபித் அவர்களின் வஃபாத் தொடர்பாக அறிவிப்புகளிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அன்னார் பிஃரே மவூனா சம்பவ நாளன்று வஃபாத்தானார்கள். ஆனால் சில அறிவிப்புகளில் உஹது போரில் அன்னார் வஃபாத்தானார்கள் என்றும் வருகிறது.

எவ்வாறிருப்பினும் உஹது போரில் ஷஹீதான நபர் அன்னார் அல்ல என்றும் மாறாக, அது அன்னாரின் சகோதரர் அவ்ஸ் பின் சாபித் (ரலி) ஆவார்கள் என்பதும் அறிவிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 382 அபூ ஷேக் அபீ பின் சாபித் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 165,166 அபீ பின் சாபித் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸாபா தொகுதி 1 பக்கம் 179 அபீ பின் சாபித் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 340 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அபூ புர்தா பின் நியார் ஆகும். இவர்களின் சுட்டுப்பெயர் அபூ புர்தா ஆகும். அபூ புர்தா தனது சுட்டுப் பெயரால் புகழ்பெற்றிருந்தார்கள். அவர்களின் பெயர் ஹானி ஆகும்.

ஓர் அறிவிப்பில் அன்னாரது பெயர் ஹாரிஸ் என்றும் இன்னொரு அறிவிப்பில் மாலிக் என்றும் வந்துள்ளது. அன்னார் பனூ குழாஆ கோத்திரத்தின் பலீ குடும்பத்தைச் சார்ந்தவர் ஆவார்கள். ஹஸ்ரத் அபூ புர்தா ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்களின் மாமா ஆவார்கள். இன்னொரு அறிவிப்பில் ஹஸ்ரத் அபூ புர்தா அவர்கள் ஹஸ்ரத் பரா பின் ஆஸிப் அவர்களின் தந்தையின் சகோதரர் ஆவார்கள் என்றும் வந்துள்ளது. இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். இது தவிர பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். மக்கா வெற்றியின் நாளன்று பனூ ஹார்ஸாவின் கொடியானது ஹஸ்ரத் அபூ புர்தா அவர்களிடத்தில் இருந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 344 அபூ புர்தா பின் நியார் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 358 ஹானி பின் நியார் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸாபா தொகுதி 7 பக்கம் 31,32 அபூ புர்தா பின் நியார் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ அப்ஸ் மற்றும் ஹஸ்ரத் அபூ புர்தா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது இந்த இருவரும் பனூ ஹாரிஸா கோத்திரத்தின் சிலைகளை உடைத்தனர்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 343 அபூ அப்ஸ் பின் ஜபர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது தமது கோத்திரத்தின் சிலைகளை உடைத்தனர்.

ஹஸ்ரத் அபூ உமாமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்காக பத்ர் மைதானத்தை நோக்கிச் செல்ல எண்ணியபோது ஹஸ்ரத் அபூ உமாமாவும் பெருமானார் (ஸல்) அவர்களோடு புறப்படுவதற்குத் தயாரானார்கள். அதற்கு அன்னாரின் மாமா ஹஸ்ரத் அபூ புர்தா பின் நியார் அவர்கள், நீங்கள் உங்களுடைய தாய்க்குத் தொண்டாற்றுவதற்காக இங்கேயே இருங்கள். தாய் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். எனவே நீங்கள் இங்கு இருங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ உமாமா அவர்கள் இஸ்லாத்திற்கெதிராக தாக்குதல் நடத்தப்படுகின்றது. நானும் போக வேண்டும் என்று தனது ஆர்வத்தை வெளிப்படுத்தினார்கள். மேலும் இது உங்களுக்கும் சகோதரி ஆவார். எனவே நீங்கள் இருந்து கொள்ளுங்கள் என்று கூறினார். இந்த விவகாரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் எடுத்து வைக்கப்பட்டபோது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உமாமா அவர்களை இருக்குமாறு கட்டளையிட்டார்கள். அதாவது மகனை இருக்குமாறு கூறினார்கள். மேலும் அபூ புர்தா படையுடன் சென்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரிலிருந்து திரும்பி வந்தபோது ஹஸ்ரத் அபூ அமாமா அவர்களின் தாயார் வஃபாத்தாகி இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்காக ஜனாஸா தொழ வைத்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 15 அபூ உமாமா பின் சஃலபா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உஹது போர் நாளன்று முஸ்லிம்களிடம் இரண்டு குதிரைகள் இருந்தன. ஒரு குதிரை பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் இருந்தது. அதன் பெயர் அஸ் சக்ஃப் ஆகும். மற்றொன்று ஹஸ்ரத் அபூ புர்தா அவர்களிடம் இருந்தது. அதன் பெயர் மலாஃவிஹ் ஆகும்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 344 அபூ புர்தா பின் நியார் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ புர்தா பின் நியார் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில கோத்திரங்களிடத்தில் சென்று அவர்களுக்காக துஆ செய்தார்கள். ஆனால் ஒரு கோத்திரத்தை மட்டும் அன்னார் விட்டு விட்டார்கள். அவர்களிடத்தில் செல்லவில்லை.

இந்த விஷயம் அந்தக் கோத்திரத்தினருக்கு வருத்தத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அதனால் அவர்கள் என்ன காரணம் என்று தமது ஒரு நண்பரின் செல்வத்தை சோதனையிட்டபோது அவரின் போர்வையில் ஒரு மாலை கிடைத்தது. அது நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றிலிருந்து ஏமாற்றி எடுக்கப்பட்டதாக இருந்தது. பிறகு அம்மக்கள் அந்த மாலையை திருப்பிக் கொடுத்தார்கள். பெருமானார் (ஸல்) அதன் பிறகு அவர்களிடம் சென்று அவர்களுக்காகவும் துஆ செய்தார்கள்.

(அல் மஜ்மவுல் கபீர் லித்திப்ரானி தொகுதி 22 பக்கம் 195, அபூ புர்தா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸுல் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ புர்தா அவர்கள் ஹஸ்ரத் அலி அவர்களோடு அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள். அவர்களின் வஃபாத் ஹஸ்ரத் முஆவிய்யா (ரலி) அவர்களின் ஆரம்ப காலகட்டத்தில் நிகழ்ந்தது. அவர்களின் வஃபாத்தான வருடம் தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் வருகின்றன. ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அன்னாரின் மரணம் ஹிஜ்ரி 41 வது ஆண்டு நிகழ்ந்தது என்றும் இன்னொரு அறிவிப்பில் ஹிஜ்ரி 42 வது ஆண்டு என்றும், மற்றொன்றில் ஹிஜ்ரி 45 ஆம் ஆண்டு என்றும் வருகிறது.

(அஸாபா தொகுதி 7 பக்கம் 32 அபூ புர்தா பின் நியார் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் பரா பின் ஆஸிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுப் பெருநாள் நாளன்று தொழுகைக்குப் பிறகு எங்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள். அதாவது எவர் நம்மைப் போன்று தொழுதாரோ மேலும் நம்மைப் போன்று குர்பானி கொடுத்தாரோ அவர் சரியாக குர்பானி கொடுத்தார். மேலும் எவர் தொழுகைக்கு முன்பாக குர்பானி

கொடுத்தாரோ அந்த ஆடு இறைச்சிக்காக மட்டுமே கொடுக்கப்பட்டதாகும். அதாவது அது குர்பானி ஆகாது. பெருநாள் தொழுகைக்கு முன்பாக குர்பானி கொடுப்பது என்பது இறைச்சி சாப்பிடுவதற்காக ஆட்டை அறுத்தது போன்றே ஆகும் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அபூ புர்தா பின் நியார் அவர்கள் (எந்த சஹாபியைப் பற்றி நாம் பார்த்து வருகின்றோமோ அந்த சஹாபி) எழுந்து நின்று கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தொழுகைக்காக வருவதற்கு முன்பே குர்பானி கொடுத்து விட்டேன். இன்றைய நாள் உண்ணுவதற்கும் பருகுவதற்கும் உரிய நாளாகும் என்று எண்ணி நான் விரைவாகவே சாப்பிட்டு விட்டு வீட்டிலுள்ளவர்களுக்கும், அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கும் கூட உண்ணக் கொடுத்தேன்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இந்த ஆடு இறைச்சிக்காக மட்டுமே வெட்டப்பட்டது. உம்முடையது குர்பானி ஏற்றுக் கொள்ளப்படாது என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூ புர்தா அவர்கள், என்னிடத்தில் ஒரு வயதை உடைய ஆடுகள் இருக்கின்றன. அந்த ஆடு இறைச்சியை கொண்ட இரு ஆடுகளை விட சிறந்ததாகும். அதாவது நல்ல கொழுத்த ஆடுகளாகும் என்று கூறினார்கள். மேலும் ஆடு ஒன்றுதான்.

ஆனால் அந்த ஒரு ஆடு இரண்டு ஆடுகளுக்கு சமமாக நன்கு கொழுத்ததாகும். அதை நான் என் தரப்பிலிருந்து குர்பானி கொடுத்தால் போதுமானதா? என்று வினவினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், சரி! செய்யுங்கள். ஆனால் உங்களுக்குப் பிறகு வேறு யாருக்கும் இது போதுமானதாக இருக்காது என்றார்கள். உங்களுக்கு அனுமதி உள்ளது. ஆனால் உங்களுக்குப் பிறகு வேறு யாருக்கும் அனுமதி இல்லை.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஈதைன், ஹதீஸ் எண் 983)

பிற ஹதீஸ்களும் இதையே கூறுகின்றன. அதாவது பெருநாளுக்குப் பிறகு குர்பானி கொடுக்க வேண்டும். இரண்டாவது, ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்த ஆட்டைத்தான் குர்பானி கொடுக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும் உமக்குப் பிறகு வேறு யாருக்கும் போதுமானதில்லை என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இது தொடர்பாக ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சபையிலும் கேள்வி எழுந்தது. அதாவது குர்பானி கொடுக்கப்படக்கூடிய ஆட்டின் வயது என்னவாக இருக்க வேண்டும்? அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதே சபையில் அமர்ந்திருந்த முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் அவர்களிடம் நீங்கள் பதில் தாருங்கள் என்று கூறினார்கள். அதற்கு அன்னார், அஹ்லே ஹதீஸின் பார்வையில் இரண்டு ஆண்டுகள் ஆன ஆட்டைக் கொடுப்பது அவசியமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 100)

அல்லது நம்முடைய நாடுகளில் இரண்டு பற்களை உடையதாக இருக்க வேண்டும் என்ற நடைமுறை உள்ளது. அதாவது இரண்டு பெரிய பற்கள் முன்னால் வந்திருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ புர்தா அவர்களிடம் உங்களுடைய குர்பானியை நான் ஏற்றுக் கொள்கின்றேன். இந்த ஒரு வயதை உடைய ஆட்டை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் இதற்குப்பிறகு இந்த அனுமதி வேறு யாருக்கும் இல்லை. மாறாக, வயதை அடைந்த ஆட்டைக் குர்பானி கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள்.

இந்த நடைமுறைதான் நமது ஜமாஅத்திலும் உள்ளது. அல்லது நமது மார்க்கத்தீர்ப்புகளும் நான் கூறியது போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிற்கேற்பவே உள்ளன.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் அஸ்அத் பின் யஸீத் ஆவார்கள். ஹஸ்ரத் அஸ்அதின் தந்தையின் பெயர் யஸீது பின் அல் ஃபாகிஹ் ஆகும். மேலும் அவர்கள் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஸுரைக்கைச் சார்ந்தவர் ஆவார்கள். அன்னார் பத்ர் போர், மற்றும் உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு கலந்து கொண்டார்கள்.

அல்லாமா இப்னு இஸ்ஹாக் அவர்கள் இவர்களுடைய பெயரை அஸ்அத் என்று எழுதாமல் சஅது பின் யஸீது என்று பத்ர் போர் சஹாபாக்களின் பெயர்களில் எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் அஸ்அது பின் யஸீது அவர்களின் பெயர் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் அன்னாரின் பெயர் சஅது பின் ஸைது சயீது பின் அல்ஃபாகிஹ் என்றும் சஅது பின் யஸீது என்றும் கூறியுள்ளனர்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 445 அஸ்அத் பின் யஸீத் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 450 சஅது பின் அல்ஃபாகிஸ் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பிறகு ஒரு பத்ர் சஹாபி ஹஸ்ரத் தமீம் பின் யஆர் அன்ஸாரி (ரலி) ஆவார்கள். ஹஸ்ரத் தமீம் அவர்களின் தந்தையின் பெயர் யஆர் ஆகும். அன்னார் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஜதாரா பின் அவ்ஃப் பின் அல் ஹாரிஸைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் பத்ர் மற்றும் உஹது போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் தமீம் அவர்களின் குழந்தைகளில் மகன் ரிபிய்யீ மற்றும் மகள் ஜமீலா இருந்தனர். அவர்களின் தாயார் பனூ அம்ரு கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 407 தமீம் பின் யஆர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் அவ்ஸ் பின் சாபித் பின் முன்ஸிர் ஆகும். இவரும் அன்ஸாரி ஆவார்கள். இவர்களின் சுட்டுப்பெயர் அபூ ஷத்தாத் ஆகும். ஹஸ்ரத் அவ்ஸ் அவர்களின் தந்தையின் பெயர் சாபித் ஆகும். அன்னாரின் தாயாரின் பெயர் சக்தா பின் ஹாரிஸா ஆகும். அன்னார் புகழ்பெற்ற சஹாபியான ஹஸ்ரத் ஷிதாத் பின் அவ்ஸ் அவர்களின் தந்தை ஆவார்கள்.

அன்னார் பனூ அம்ரு பின் மாலிக் பின் நஜ்ஜார் என்ற அன்சார்களின் கோத்திரத்தைச் சார்ந்தவராவார்கள். இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். மேலும் ஈமான் கொண்டார்கள். பத்ர், உஹது போர்களில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

புகழ்பெற்ற கவிஞரான ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் சாபித் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உபய் பின் சாபித் (ரலி) ஆகியோர் அன்னாரின் சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்ஃபான் (ரலி) மதீனா ஹிஜ்ரத் செய்து வந்தபோது இவர்களிடத்தில்தான் தங்கினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்ஃபான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாபித் அவர்களுக்கிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

இவர்களின் வஃபாத் தொடர்பாக அப்துல்லாஹ் பின் முஹம்மது பின் உம்மாரா அன்ஸாரி கூறுகின்றார்கள்: அவர்களின் ஷஹாதத்

உஹது போரில் நிகழ்ந்தது. சிலர் இதில் சற்று மாறுபட்டவாறு கூறுகின்றனர். ஆனால் மாறுபடுகின்றவர்கள் பலவீனமான அறிவிப்பாளர்கள் ஆவர்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 382 உஸ்மான் பின் அஃப்ஃபான் (ரலி), அவ்ஸ் பின் சாபித் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து கூறப்போகின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் சாபித் பின் ஹன்ஸா ஆகும். இவர்கள் பனூ கனம் பின் அதீ பின் நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். பத்ர் போரில் கலந்து கொள்ளும் நற்பேறு பெற்றார்கள். இவர்கள் தொடர்பாக இவ்வளவு மட்டுமே தெரிய வந்துள்ளது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 389 சாபித் பின் ஹன்ஸா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பிறகு ஹஸ்ரத் அவ்ஸ் பின் அஸ்ஸாமித் என்ற ஒரு சஹாபி. பத்ர் சஹாபி ஆவார்கள். பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாமித் ஹஸ்ரத் உபாதா பின் சாமித் (ரலி) அவர்களின் சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் அவ்ஸ் அவர்கள் பத்ர் உஹது உட்பட பிற போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாமித் மற்றும் முர்ஸத் பின் அபீ முர்ஸத் அல்கனவி ஆகியோருக்கிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அறிவிப்புகளில் வருகின்றது. ஹஸ்ரத் அவ்ஸ் அவர்கள் தமது மனைவி ஹுவைலா பின்த் மாலிக் அவர்களோடு ஸிஹார் செய்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 413 அவ்ஸ் பின் சாமத் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 323 அவ்ஸ் பின் சாமத் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஸிஹார் என்பது அரபு நாட்டிலிருந்த ஒரு நடைமுறையாகும். அதாவது தமது மனைவியை தாய் என்று கூறி விடுதல் அல்லது சகோதரி என்று கூறி விட்டு அவர்களை தமக்கு ஹராமாக்கிக் கொள்ளுதல் ஆகும். அதாவது நீ எனது தாய் ஆவாய் என்று கூறி மனைவியைத் தமக்கு ஹராமாக்கிக் கொண்டனர். இஸ்லாம் இந்த சடங்கை ஒழித்தது. மேலும் இவ்வாறு கூறுவதனால் தலாக் ஆகிவிடாது. தாய் என்றோ சகோதரி என்றோ கூறினால் தலாக் ஆகிவிடாது எனக் கட்டளையிட்டது. இது நிச்சயமாக ஒரு வீணான ஒரு விஷயமாகும். இஸ்லாம் இதற்கு தண்டனையாக பரிகாரமும் எடுத்துரைத்துள்ளது.

ஹஸ்ரத் அவ்ஸ் அவர்கள் பரிகாரத்தை வழங்குவதற்கு முன்பாகவே தனது மனைவியோடு உறவு கொண்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அவரிடம் இது தவறாகும். பதினைந்து சாஃஹ் அளவு அதாவது 60 ஏழைகளுக்கு உணவளியுங்கள். அதாவது 60 ஏழைகளுக்கு உணவளிப்பது அதற்கான பரிகாரமாகும்.

ஸிஹார் தொடர்பாக திருக்குர்ஆனிலும் கட்டளை உள்ளது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

اَلَّذِيْنَ يُظٰهِرُوْنَ مِنْكُمْ مِّنْ نِّسَآئِهِمْ مَّا هُنَّ اُمَّهٰتِهِمْ ؕ
اِنْ اُمَّهٰتُهُمْ اِلَّا الّٰٓـِٔيْ وَلَدْنَهُمْ ؕ وَاِنَّهُمْ لَيَقُوْلُوْنَ مُنْكَرًا مِّنَ الْقَوْلِ وَزُوْرًا ؕ
وَاِنَّ اللّٰهَ لَعَفُوٌّ غَفُوْرٌ ○ وَالَّذِيْنَ يُظٰهِرُوْنَ مِنْ نِّسَآئِهِمْ
ثُمَّ يَعُوْدُوْنَ لِمَا قَالُوْا فَتَحْرِيْرُ رَقَبَةٍ مِّنْ قَبْلِ اَنْ يَّتَمَآسَّا ؕ
ذٰلِكُمْ تُوْعَظُوْنَ بِهٖ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ○

فَمَنْ لَّمْ يَجِدْ فَصِيَامُ شَهْرَيْنِ مُتَتَابِعَيْنِ مِنْ قَبْلِ اَنْ يَّتَمَآسَّا ۚ فَمَنْ لَّمْ
يَسْتَطِعْ فَاِطْعَامُ سِتِّيْنَ مِسْكِيْنًا ؕ ذٰلِكَ لِتُؤْمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ ؕ
وَتِلْكَ حُدُوْدُ اللّٰهِ ؕ وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ اَلِيْمٌ ○

அதாவது உங்களுள் எவர்கள் தம் மனைவிகளைத் தாய் என்றழைத்து விடுகிறாரோ, அவர்களின் தாயாக அவர்கள் ஆகிவிடுவதில்லை. அவர்களைப் பெற்றெடுத்தவர்களே அவர்களின் தாய்கள் ஆவர். நிச்சயமாக அவர்கள் விரும்பத்தகாததும், பொய்யானதுமான கூற்றைக் கூறுகின்றனர். நிச்சயமாக அல்லாஹ் பாவங்களை அழித்து விடுபவனும், மிக்க மன்னிப்பவனுமாவான்.

தங்கள் மனைவிகளைத் தாயென்றழைத்துப் பின்னர் தாங்கள் கூறியதன் பால் மீண்டும் திரும்பி விடுபவர்கள் (கணவன், மனைவியாகிய) அவ்விருவரும் ஒருவரையொருவர் தொடுவதற்கு முன்னர் ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். இது உங்களுக்குக் கூறப்படுகின்ற அறிவுரையாகும். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிபவனாவான்.

ஆனால் (அடிமையைப்) பெறாதவர், அவ்விருவரும் ஒருவரையொருவர் தொடுவதற்கு முன்னர் இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு வைக்க வேண்டும். இவ்வாறு செய்ய இயலாதவர், அறுபது ஏழைகளுக்கு உணவளித்தல் வேண்டும். இ(க்கட்டளையான)து, நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனது தூரிடத்தும் நம்பிக்கை கொள்வதற்கேயாகும். இவை அல்லாஹ்வின் வரையறைகளாகும். நிராகரிப்பாளர்களுக்கு வேதனையளிக்கக் கூடிய தண்டனை (விதிக்கப்பட்டு) உள்ளது. (58:3–5)

இதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் மொழியாக்கம் செய்துள்ளார்கள். அதாவது எவர் தனது மனைவியை தாய் என்று கூறி விடுகின்றாரோ உண்மையில் அவள் அவனது தாயாக ஆக முடியாது. ஏனென்றால், எந்த பெண் மூலமாக அவர்கள் படைக்கப்பட்டனரோ அந்த பெண்களே தாய் ஆவார்கள். எனவே இவர்களின் இக்கூற்று அறிவுக்கு புறம்பானதும், முற்றிலும் பொய்யுமாகும். மேலும் இறைவன் மன்னிக்கக் கூடியவன் ஆவான்.

எவர்கள் தாய் என்று கூறி விடுகின்றார்களோ அதற்குப் பிறகு அந்த கூற்றிலிருந்து திரும்பினால் பிறகு தமது மனைவியை தொடுவதற்கு முன்பு ஒரு அடிமையை விடுவிக்க வேண்டும். இதுவே இறைவன் புறமிருந்துள்ள அறிவுரையாகும். ஒரு அடிமையை விடுவிக்க இயலவில்லை என்றால் பிறகு தனது மனைவியை தொடுவதற்கு முன்பு இரண்டு மாதங்கள் நோன்பு வைக்க வேண்டும். நோன்பு வைப்பதற்கும் இயலவில்லை என்றால் பிறகு 60 ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்.

(ஆர்ய தரம், ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 50)

அவர்களது மனைவி ஹஸ்ரத் ஹுலைவா பின் மாலிக் பின் சஃலபா அறிவிக்கின்றார்கள்: அதாவது இந்த சஹாபியின் மனைவி. எனது கணவர் அவ்ஸ் பின் சாமத் என்னிடம் ஸிஹார் செய்தார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் முறையிட்டேன். பெருமானார் (ஸல்) அவர்கள் இது தொடர்பாக அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அவர் உன்னுடைய தந்தையின் சகோதரரின் மகன் ஆவார்கள் என்றார்கள். நான் எனது கூற்றை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தேன். அதாவது அன்னார் கூறினார்கள்: எவ்வாறு தாயாக முடியும்? தந்தையின் சகோதரன் மகன் என்ற அடிப்படையில் சகோதரனும் கூட மேலும் நீ அவரின் மனைவியும் கூட என்றார்கள்.

அந்தப் பெண்மணி கூறுகின்றார்கள்: நான் எந்நிலையிலும் அந்த விஷயத்தை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தேன்.

எதுவரையென்றால் திருக்குர்ஆனின் இந்த வசனம் இறங்கியது.

قَدْ سَمِعَ اللّٰهُ قَوْلَ الَّتِیْ تُجَادِلُكَ فِیْ زَوْجِهَا

அதாவது அல்லாஹ் அந்த பெண்ணின் கூற்றை செவியேற்றான். அதாவது அன்னாரிடம் யார் தன்னுடைய கணவன் தொடர்பாக சண்டையிட்டுக் கொண்டிருந்தார்களோ அந்த பெண்ணின் கூற்றை அல்லாஹ் செவியேற்றான். (58:2)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உன்னுடைய கணவர் ஒரு அடிமையை விடுவிக்க வேண்டும். இப்போது அவருக்குரிய தண்டனை இதுவாகும். அது திருக்குர்ஆனில் உள்ள கட்டளையாகும். அதில் எல்லாம் விரிவாக கூறப்பட்டிருக்கின்றன. அதாவது முதலில் ஒரு அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அதற்கு அந்த சஹாபியின் மனைவி அவருக்கு அதற்குரிய ஆற்றல் இல்லை. அவரோ ஏழ்மையான மனிதர் ஆவார் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், பிறகு இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பு வைக்க வேண்டும் என்று கூறினார்கள்.

அந்த பெண் அறிவிக்கின்றார்கள்: நான் கூறினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவரது வயது எப்படிப்பட்டதென்றால் அவரால் தொடர்ந்து நோன்புகள் வைக்க இயலாது. அதற்கான ஆற்றல் அவரிடத்தில் இல்லை. அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், பிறகு அவர் 60 ஏழைகளுக்கு உணவு அளிக்கட்டும் என்று கூறினார்கள். அப்போது நான் கூறினேன்: அவரிடத்தில் செல்வமும் இல்லை. அவர் சதகா கொடுக்கும் அளவிற்கு அவரிடம் எதுவும் இல்லை.

ஹுவைலா அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது நான் அமர்ந்திருக்கும்போதே பேரீத்தம் பழத்தின் ஒரு பை வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதனை ஒருவர் வழங்கினார். நான் கூறினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! பேரீத்தம் பழத்தின் இன்னொரு பையைக் கொண்டு நான் அவருக்கு உதவுவேன். அதாவது எனக்கு இது கிடைத்து விட்டால் இன்னொரு மூட்டைக்கான ஏற்பாட்டை என்னால் செய்ய இயலும் என்றார்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், சரி! இந்த மூட்டையை எடுத்துச் செல்லுங்கள். அதிலிருந்து அவர் தரப்பிலிருந்து 60 ஏழைகளுக்கு உணவளியுங்கள். பிறகு உம்முடைய தந்தையின் சகோதரரின் மகனிடத்தில் செல்லுங்கள். அதாவது உங்களது கணவனிடத்தில் செல்லுங்கள். அவர் கூறி விடுவதனால் நீ ஒன்றும் அவரது தாய் ஆகி விட முடியாது என்று கூறினார்கள்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுத் தலாக் ஃபிஸ் ஸிஹார் ஹதீஸ் எண் 2214)

இந்த சஹாபாக்களின் வாழ்க்கையில் சில பிரச்சனைகளுக்கான தீர்வுகளும் கிடைக்கின்றன.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இஸ்லாத்தில் நடந்த முதல் ஸிஹார் இதுவே ஆகும். அதாவது ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாமித் அவர்கள் தன்னுடைய மனைவியை தாய் என்று கூறிய சம்பவமே ஆகும். அவர்களின் மனைவி தந்தையின் சகோதரரின் மகள் ஆவார்கள். அவரோடுதான் அவர் ஸிஹார் செய்தார்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 323 அவ்ஸ் பின் சாமத் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் வரம்புகளை நியமித்திருக்கின்றான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலும் இதுபோன்ற ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அன்னாரும் இதே தண்டனையை கூறினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் இதே போன்ற ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அன்னாரும் இதே தண்டனையை கூறினார்கள். மிகவும் ஏழ்மையாக இருந்து எந்த சக்தியும் இல்லாதிருந்தால் மட்டும் பிறகு அவர் பாவமன்னிப்பு கோர வேண்டும். எந்த அளவுக்கு முடியுமோ அவர் இந்த தண்டனையை நிறைவேற்ற வேண்டும். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் வரையறைகளை நிர்ணயித்திருக்கின்றான்.

சிலர் சின்னச்சின்ன விஷயங்களில் சண்டை ஏற்படும்போது நீ எனக்கு ஹராமாகி விட்டாய் எனக் கூறும் வழக்கத்தை கொண்டுள்ளனர். நீ என்னுடைய தாயைப் போன்றவள் ஆவாய். நீ இவ்வாறு ஆவாய். அவ்வாறு ஆவாய் என் சத்தியம் செய்து விட்டால் பிறகு அல்லாஹ் நியமித்திருக்கக்கூடிய வரம்புகளுக்கேற்ப அவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். அதாவது அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அல்லது நோன்பு நோற்க வேண்டும். அல்லது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்.

ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாமத் அவர்கள் கவிஞராகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாமித் மற்றும் ஷதாது பின் அவ்ஸ் அன்ஸாரி இருவரும் பைத்துல் முகத்திஸில் வசித்து வந்தார்கள். அவர்களின் மரணம் பாலத்தீனத்தின் ரம்லா என்ற இடத்தில் ஹிஜ்ரி 34 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அப்போது ஹஸ்ரத் அவ்ஸ் அவர்களின் வயது 72 ஆகும்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 323 அவ்ஸ் பின் சாமத் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அர்கம் பின் அபீ அர்கம் ஆகும். அவர்களின் சுட்டுப்பெயர் அப்துல்லாஹ் ஆகும். ஹஸ்ரத் அர்கம் அவர்களின் தாயாரின் பெயர் உமைமா பின்த் ஹாரிஸ் ஆகும். சில அறிவிப்புகளில் அவர்களின் பெயர் தமாஸிர் பின்த் உஸைம் என்றும் சஃபியா பின்த் ஹாரிஸ் என்றும் வந்துள்ளது.

ஹஸ்ரத் அர்கம் அவர்கள் பனூ மக்ஸூம் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஆரம்ப சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். சிலரின் பார்வையில் அன்னார் ஈமான் கொள்ளும்போது அன்னாருக்கு முன்பு 11 நபர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தனர். சிலர் அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட 7 வது நபர் என்றும் கூறுகின்றனர்.

ஹஸ்ரத் உர்வா பின் சுபைர் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அர்கம் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜராஹ் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் ஆகியோர் ஒரே நேரத்தில் ஈமான் கொண்டனர். ஹஸ்ரத் அர்கம் அவர்களின் ஒரு வீடு மக்காவிற்கு வெளியே ஸஃபா மலைக்கு அருகே இருந்தது. அது வரலாற்றில் தாரே அர்கம் என்ற பெயரில் புகழ்பெற்றது. தாரே அர்கம் அவர்களின் வீடாகும்.

அந்த வீட்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்கள் இறைவணக்கம் செய்து வந்தனர். அங்கு தான் ஹஸ்ரத் உமர் அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு முஸ்லிம்களின் எண்ணிக்கை 40 ஐ எட்டியது. மேலும் அந்த வீட்டை விட்டு வெளியே வரத் தொடங்கினர். அதாவது ஹஸ்ரத் உமர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு. இந்த வீடு ஹஸ்ரத் அர்கம் அவர்களின் சொத்தாகும். பிறகு அன்னாரது மகன்வழிப் பேரன்கள் இந்த வீட்டை அபூ ஜஃபர் மன்ஸூர் என்பவருக்கு விற்று விட்டனர்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 187 அர்கம் பின் அபீ அர்கம் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸாபா தொகுதி 1 பக்கம் 197 அர்கம் பின் அபீ அர்கம் (ரலி) – 1995 ஆம் ஆண்டு

பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 574 ஹதீஸ் எண் 6127 கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா ஸிக்ர் அர்கம் பின் அபீ அர்கம் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பாக சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதியுள்ள விவரம் என்னவென்றால், இஸ்லாத்தினுடைய முதல் தப்லீக் தலைமையகம் (அதாவது தாரே அர்கம் தொடர்பாக அன்னார் எழுதியுள்ளார்கள்) அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மக்காவில் ஒரு தப்லீக் தலைமையகம் நிறுவ வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அங்கு சென்று முஸ்லிம்கள் தொழ வேண்டும் என்றும், எவ்விதத் தடையுமின்றி ஒன்று சேரவும், அமைதியாகவும் நிம்மதியாகவும் தொடர்ந்தும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு எளிதாகவும் அமைய அவ்வாறு எண்ணினார்கள்.

இந்த நோக்கத்திற்காக தலைமையகத்திற்கு ஏற்ற ஒரு வீட்டின் தேவை இருந்தது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் புதிய முஸ்லிமான அர்கம் பின் அர்கம் பின் அபீ அர்கம் அவர்களின் வீட்டை இந்தப் பணிக்காக விரும்பினார்கள். அது ஸஃபா மலை அருகே அமைந்திருந்தது. அதற்குப் பிறகு அனைத்து முஸ்லிம்களும் அங்குதான் ஒன்றுசேர்ந்து வந்தார்கள். அங்குதான் தொழுது வந்தார்கள். உண்மையைத் தேடக்கூடியவர்களும் அங்கேயே வந்தார்கள்.

அதாவது மார்க்கத்தைத் தேடி இஸ்லாத்தின் தூதுச் செய்தியை கேட்பதற்காகவும், புரிவதற்காகவும் வந்தார்கள். அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நெருக்கத்திலிருந்து அருள் பெற வேண்டும் என்பதற்காக வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள். இதன் காரணமாகவே இந்த வீட்டிற்கு வரலாற்றில் ஒரு குறிப்பான புகழ் இருக்கின்றது. மேலும் தாருல் இஸ்லாம் என்ற பெயராலும் அறியப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏறக்குறைய மூன்று வருடங்கள் தாரே அர்கமில் பணி செய்தார்கள். அதாவது நபித்துவத்தின் 4 ஆம் ஆண்டு அதை அன்னார் தலைமையகமாக ஆக்கினார்கள். மேலும் ஆறாம் ஆண்டின் இறுதி வரை அன்னார் அதில் தமது பணியைத் தொடர்ந்தார்கள்.

வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகின்றார்கள்: தாரே அர்கமில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட இறுதி நபர் ஹஸ்ரத் உமர் அவர்கள் ஆவார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக முஸ்லிம்களுக்கு அதிக வலு சேர்ந்தது. மேலும் அவர்கள் தாரே அர்கமை விட்டு வெளியேறி பகிரங்கமாக தப்லீக் செய்ய ஆரம்பித்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 129)

மதீனா ஹிஜ்ரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அர்கம் (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் அபூ தல்ஹா ஸைது பின் சஹல் ஆகியோருக்குமிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 185 அர்கம் பின் அபீ அர்கம் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அர்கம் அவர்கள் பத்ர் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். பத்ர் போரில் கிடைத்த செல்வத்திலிருந்து ஒரு வாளை பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு வழங்கினார்கள். ஹஸ்ரத் அர்கம் அவர்கள் பத்ர், உஹது உட்பட அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு மதீனாவில் ஒரு வீட்டையும் வழங்கி இருந்தார்கள். ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சதகா வசூல் செய்வதற்காக நியமித்து அனுப்பினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 198 அர்கம் பின் அபீ அர்கம் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸாபா தொகுதி 1 பக்கம் 187 அர்கம் பின் அபீ அர்கம் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

வரலாற்றில் வருகின்றது: ஹஸ்ரத் அர்கம் அவர்கள் ஹில்ஃபுல் புஸூல் உடன்படிக்கையிலும் இருந்தார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 131 அர்கம் பின் அபீ அர்கம் (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அதாவது இஸ்லாம் வருவதற்கு முன்பு ஏழைகளுக்கு உதவி செய்வோம் என்று சிலர் உறுதிமொழி எடுத்தனர். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அடங்குவர்.

ஹஸ்ரத் அர்கம் அவர்களின் மகன் உஸ்மான் பின் அர்கம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: என்னுடைய தந்தையாரின் வஃபாத் ஹிஜ்ரி 53 ஆம் நிகழ்ந்தது. அப்போது அன்னாரின் வயது 83 ஆகும். சிலர் ஹிஜ்ரி 55 ஆம் ஆண்டு அவர்கள் வஃபாத்தானார்கள் என்றும் கூறுகின்றனர். வயது தொடர்பாக கருத்து வேறுபாடு உள்ளது. அதாவது 80 ஆக இருந்தது. அல்லது அதைவிடச் சற்று அதிகமாகும் என்கின்றனர்.

ஹஸ்ரத் அர்கம் அவர்கள் தனது ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் அவர்கள் தொழ வைக்க வேண்டும் என்று உயில் எழுதியிருந்தார்கள். இந்த சஹாபி வஃபாத்தானபோது ஹஸ்ரத் சஅது (ரலி) அவர்கள் அகீக் என்ற இடத்தில் இருந்தார்கள். அது மிகவும் தொலை தூரத்திலுள்ள இடமாகும்.

மர்வான் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஒரு சஹாபி ஏதோவொரு இல்லாத மனிதரின் காரணமாக அடக்கம் செய்யப்படாமல் இருக்க முடியுமா? என்றும் அவர் இல்லாததினால் இந்த சஹாபியின் உடலை அவர் வரும் வரை வைக்க வேண்டுமா? என்றும் கேட்டு விட்டு அவர்களின் ஜனாஸா தொழுகையைத் தானே நடத்த எண்ணினார்கள். ஆனால் உபைதில்லாஹ் பின் அர்கம் அவர்கள் மர்வானின் பேச்சைக் கேட்கவில்லை. மேலும் சஅது பின் அபீ வக்காஸ் வந்தபோது ஹஸ்ரத் அர்கம் அவர்களின் ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்பட்டது. மேலும் ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 188 அர்கம் பின் அபீ அர்கம் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவர்கள் தொடர்பாக ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: அதாவது ஒரு முறை ஹஸ்ரத் அர்கம் அவர்கள் பைத்துல் முகத்தஸ் செல்வதற்காக பயண எண்ணம் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து பயணத்திற்கான அனுமதியை வேண்டினார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாரிடம் நீங்கள் ஏதேனும் தேவையுடனோ? அல்லது தொழில் நோக்கத்திற்காகவா? பைத்துல் முகத்தஸ் செல்கின்றீர்கள் என்று வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் அர்கம் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: அதாவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே!

எனது தாய் தந்தையர் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக! எனக்கு அங்கு எந்த வேலையும் இல்லை. தொழில் நோக்கத்திற்காகவும் நான் அங்கு செல்லவில்லை. மாறாக, பைத்துல் முகத்தஸில் தொழ விரும்புகின்றேன் என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னுடைய இந்த பள்ளிவாயிலில் தொழும் ஒரு தொழுகை பிற பள்ளிவாசலில் நடைபெறும் ஆயிரம் தொழுகைகளை விட சிறந்ததாகும். அதாவது இங்கு மதீனாவில் அதாவது கஃபாவைத் தவிர்த்து என்று கூறினார்கள். அதன் காரணமாக ஹஸ்ரத் அர்கம் அவர்கள் தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 187 அர்கம் பின் அபீ அர்கம் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் பஸ்பஸ் பின் அம்ர் ஆவார்கள். ஓர் அறிவிப்பில் அன்னாரது பெயர் பஸ்பஸ் பின் பிஷ்ர் என்றும் வந்துள்ளது. பஸ்பஸ் ஜுஹனி அன்ஸாரி அவர்கள் பனூ சஅதா பின் கஅப் பின் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். ஆனால் அர்வா பின் சுபைரின் அடிப்படையில் பனூ ஸரீஃப் பின் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். அன்னார் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். அன்ஸாரி சஹாபி ஆவார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 373 பஸ்பஸ் ஜுஹனி (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் புசைஸா, புசைஸ், பஸ்பஸா என்ற பெயரினாலும் அறியப்படுகிறார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 379 பஸ்பஸ் பின் அம்ர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போர் தவிர உஹது போரிலும் அன்னார் கலந்து கொண்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 422 பஸ்பஸ் பின் அம்ர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மதீனாவிலிருந்து பத்ர் போருக்காகக் கிளம்பிய சம்பவத்தை எடுத்துரைத்தவாறு சீரத் காத்தமுன் நபிய்யின் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதியுள்ளது என்னவென்றால், மதீனாவிலிருந்து கிளம்பியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூமை மதீனாவின் அமீராக நியமித்திருந்தார்கள். ஆனால் அன்னார் ரவ்ஹா என்ற இடத்திற்கு அருகே வந்தடைந்தபோது அதாவது 36 மைல் மதீனாவிலிருந்து பயணித்த பிறகு அப்துல்லாஹ் ஒரு பார்வையற்ற மனிதர் ஆவார்.

மேலும் குரைஷிகளின் படை வருவதற்கான செய்தியின் எதிர்பார்ப்பு உள்ளது என்று எண்ணியும் அன்னாருக்குப் பிறகு மதீனாவின் ஏற்பாடுகள் வலுவானதாக இருக்க வேண்டும் என்று எண்ணியும் அன்னார் அபூ லுபாபா பின் முன்ஸிர் அவர்களை மதீனாவின் அமீராக நியமித்து திருப்பி அனுப்பினார்கள். மேலும் அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் அவர்கள் தொடர்பாக அவர்கள் இமாமுஸ் ஸலாத்தாக மட்டும் இருப்பார்கள் என்றும் கட்டளையிட்டார்கள். நிர்வாக ரீதியிலான பணிகளை அபூ லுபாபா பார்க்கட்டும் என்றார்கள்.

அன்னார் எழுதுகின்றார்கள்: மதீனாவின் வெளிப்புறத்து மக்களுக்கு அதாவது குபாவிற்கு அன்னார் ஆஸிம் பின் அதீ அவர்களை தனி அமீராக நியமித்தார்கள். அதே இடத்திலிருந்து அன்னார் இந்த அமீர்களை நியமித்து அனுப்பினார்கள். அல்லது மாற்றினார்கள். அதே இடத்திலிருந்து அன்னார் பஸீஸ் அதாவது பஸ்பஸ் மற்றும் அதீ பின் அதீ என்ற இரு சஹாபாக்களை எதிரிகளின் அசைவுகளை பற்றி தெரிந்து வருவதற்காக பத்ரை நோக்கி அனுப்பினார்கள். மேலும் விரைவாக செய்தியை அறிந்து திரும்பி வருமாறு கட்டளையிட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 354)

இரண்டு வாரங்களுக்கு முன்னுள்ள குத்பாவில் ஹஸ்ரத் அதீ பின் அபீ சக்பாவைப் பற்றிய குறிப்பில் அந்த சம்பவம் எடுத்துரைக்கப்பட்டு விட்டது.

அனுப்பப்பட்டவர்களில் ஹஸ்ரத் பஸ்பஸ் மற்றும் அதீ பின் சக்பா ஆகிய இருவரும் அடங்குவர். இவர்கள் பத்ர் இடத்தை சென்றடைந்தனர். ஹஸ்ரத் பஸ்பஸ் பின் அம்ரு மற்றும் அதீ பின் சுக்பா அவர்கள் கிணற்றருகே உள்ள ஒரு குன்றின் அருகில் தங்களது ஒட்டகங்களை அமர்த்தி விட்டு தங்களின் குவளையில் கிணற்றிலிருந்து நீரை நிரப்பி அருந்தினர். இதற்கிடையே அவர்கள் அங்கு இரண்டு பெண்கள் ஏதோவொரு குழுவினரின் வருகை தொடர்பாக பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டனர்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 617 பஸ்பஸ்.... 1955 ஆம் ஆண்டு மிஸ்ரில் தராஸுல் இஸ்லாமில் அச்சிடப்பட்டது)

அங்கு ஒரு மனிதரும் நின்று கொண்டிருந்தார். எவ்வாறிருப்பினும் இவர்கள் இருவரும் திரும்பி வந்து பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அந்த பெண்கள் ஒரு குழுவினர் வருவது தொடர்பாக பேசிக் கொண்டிருந்ததைக் குறிப்பிட்டனர். அங்கு நின்று கொண்டிருந்த மனிதரின் பெயர் மஜ்தி ஆகும்.

இந்த விளக்கத்தையும் முன்பு நான் எடுத்துரைத்து விட்டேன்.

வரலாற்று ஆசிரியர் எழுதுகிறார்: அடுத்த நாள் காலையில் அபூ சுஃப்யான் அங்கு வந்தார். குழுவினரும் அங்கு வந்திருந்தனர். அவர் மஜ்தியிடம், மஜ்தியே! இங்கு ஏதேனும் மனிதர்களை பார்த்தீரா? எவரேனும் துப்பறிவதற்காக வந்திருந்தனரா? என்று வினவினார். அத்தோடு நீ எதிரியின் நிலையைப் பற்றி நம்மிடம் மறைத்தால் குரைஷிகளில் எவரும் உன்னோடு சமாதானம் மேற்கொள்ள மாட்டார்கள் என்றும் கூறினார்.

அதற்கு மஜ்தி, இறைவன் மீது ஆணையாக! நான் இங்கு நான் அறியாத எந்த மனிதரையும் பார்க்கவில்லை. இங்கிருந்து உமக்கும் யஸ்ரபிற்கும் (மதீனாவிற்கும்) இடையே எந்த எதிரியும் இல்லை. அப்படி யாராவது இருந்திருந்தால் என்னிடமிருந்து மறைந்திருக்க முடியாது. மேலும் நானும் உன்னிடம் மறைத்திருக்க மாட்டேன் என்று கூறிவிட்டு ஆனால் நான் இரண்டு பயணிகளைக் கண்டேன். அவர்கள் இந்த இடத்தில் நின்று கொண்டிருந்தனர் என்று ஹஸ்ரத் பஸ்பஸ் பின் அம்ரு மற்றும் அதீ அவர்கள் தங்களது ஒட்டகத்தை நிறுத்தி அமர்த்தியிருந்த அந்த இடத்தை சைகை செய்தார்.

அவர் கூறினார்: அவர்கள் இங்கு தமது ஒட்டகத்தை அமர்த்தி தண்ணீர் அருந்தினர். பிறகு இங்கிருந்து சென்று விட்டனர்.

அந்த இரண்டு சஹாபாக்களும் எங்கு தமது ஒட்டகத்தை நிறுத்தி இருந்தனரோ அந்த இடத்திற்கு அபூ சுஃப்யான் வந்து அந்த ஒட்டகங்களின் சாணத்தை உடைக்க ஆரம்பித்தார். அடையாளம் காண்பதற்காக அவ்வாறு உடைத்தார். அவர் உடைத்தபோது அதில் பேரீத்தம் பழ கொட்டைகள் இருந்தன. அபூசுஃப்யான் கூறினார்: இறைவன் மீது ஆணையாக! இது யஸ்ரப் வாசிகளின் ஒட்டகங்களின் உணவாகும். இவர்கள் அங்கிருந்துதான் வந்துள்ளார்கள். இவர்கள் இருவரும் முஹம்மது (ஸல்) மற்றும் முஹம்மதின் தோழர்களின்

ஒற்றர்கள் ஆவார்கள். அதாவது வந்திருந்த இருவரும் மதீனாவிலிருந்து வந்திருந்தனர். மேலும் இவர்கள் இருவரும் ஒற்றர்கள் ஆவர். இந்த ஒட்டக சாணத்திலிருந்து ஏன் அவர்கள் இங்கு வந்தார்கள்? என்று எனக்குத் தெரிந்து விட்டது என்று கூறியவாறு இவர்கள் மிக அருகில் இருப்பதைப் போன்று தோன்றுகிறது என்று கூறிவிட்டு அங்கிருந்து விரைவாக தமது குழுவினரை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டார்.

(கிதாபுல் மகாஸி லில்வாக்தி பக்கம் 40,41 – 1984–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இந்த அரபிகளுக்கு அந்த காலத்திலேயே துப்பறியக்கூடிய தனித்திறமைகள் இருந்தது. பத்ர் போர் பற்றிய குறிப்பில் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதியுள்ளளது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ருக்கு அருகே வந்தடைந்தபோது ஏதோவொரு அடிப்படையில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் அவர்களை தமக்குப் பின்னால் அமர வைத்துக் கொண்டு இஸ்லாமிய படையை விட்டு சற்று முன்னேறிச் சென்றார்கள்.

இது தொடர்பாக அறிவிப்புகளில் இல்லை. அப்போது அன்னாருக்கு ஒரு முதிய காட்டரபி கிடைத்தார். அவரோடு பேசும்போது அப்போது குரைஷிகளின் படை பத்ருக்கு மிக அருகில் வந்தடைந்து விட்டது என்ற செய்தி தெரிய வந்ததும் திரும்பி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் அலி, சுபைர் பின் அவாம் மற்றும் சஅது பின் வக்காஸ் போன்றோரை நிலைமையை தெரிந்து வருவதற்காக முன்னே அனுப்பினார்கள்.

ஓர் அறிவிப்பில் அனுப்பப்பட்டவர்களில் ஹஸ்ரத் பஸ்பஸ் அவர்களும் அடங்குவார்கள் என்று வருகிறது.

முதலில் இவர்கள் குழுவினர்களின் செய்தியை சேகரிப்பதற்காக சென்றிருந்தார்கள். இப்போது படை வந்து கொண்டிருக்கிறது என்பது தெரிய வந்தபோது அந்த படையைப் பற்றிய செய்தியை சேகரிப்பதற்காக இவர்களை அனுப்பினார்கள். அவர்களில் இவர்களும் அடங்குவார்கள். இவர்கள் பத்ர் பள்ளத்தாக்கை சென்றடைந்தபோது திடீரென்று சில மக்கத்து மக்கள் ஒரு நீரூற்றிலிருந்து தண்ணீர் நிரப்பிக் கொண்டிருப்பதைக் கண்டனர். அந்த சஹாபாக்கள் அவர்களின் மீது தாக்குதல் தொடுத்து அவர்களில் அடிமையான ஒரு கருப்பரை அதாவது படையுடன் வந்திருந்தவரை பிடித்து அவரை பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள். அவரைக் கொண்டு வந்த நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுகையில் மூழ்கியிருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருப்பதைக் கண்ட சஹாபாக்கள் தாமாகவே அந்த அடிமையிடம் விசாரிக்கத் தொடங்கி விட்டனர். அதாவது அபூசுஃப்யானின் குழுவினர் எங்கே? என வினவினர். அந்த அடிமையோ, படையுடன் வந்திருந்தார். அதாவது பத்ர் போருக்காக வந்த படையுடன் அவர் வந்திருந்தார். அவருக்கு அந்த குழுவினரைப் பற்றிய எந்த செய்தியும் தெரியாது. எனவே அவர் அபூசுஃப்யான் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் அபுல் ஹகம் அதாவது அபூஜஹில் மற்றும் உத்பா மற்றும் ஷைபா மற்றும் உமய்யா போன்றவர்கள் இந்தப் பள்ளத்தாக்கின் இன்னொரு எல்லையில் கூடாரமிட்டுள்ளனர் என்று கூறினார்.

சஹாபாக்களுக்கு குழுவினர் பற்றிய செய்தியை சேகரிப்பதில் ஆர்வம் இருந்ததாலும், அவர்களின் சிந்தனை அதன் பக்கமே சாய்ந்திருந்ததால் இந்த மனிதர் பொய் கூறுகிறார் என்று கருதினர். வேண்டுமென்றே இவர் அந்த குழுவினர் பற்றிய செய்தியை நம்மிடமிருந்து மறைக்க விரும்புகிறார் என்று எண்ணி சிலர் அவரை அடிக்கவும் செய்தனர். ஆனால் அடிக்கும்போது அவர் அடிக்கு அஞ்சி நான் கூறி விடுகிறேன் என்று கூறும்போது இவர்கள் அவரை விட்டு விட்டனர். பிறகு மீண்டும் முதலில் கூறிய அதே பதிலையே அவர் கூறினார். அதாவது எனக்கு அபூசுஃப்யானைப் பற்றியும் அவரது குழுவைப் பற்றியும் தெரியாது. ஆனால் அபூ ஜஹில் ஒரு படையை அழைத்துக் கொண்டு வந்துள்ளான். அவன் அருகில்தான் இருக்கின்றான் என்றும் கூறினார். இந்த விஷயங்களைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் உடனடியாக தொழுகையை முடித்து விட்டு சஹாபாக்கள் அடிப்பதை நிறுத்தினார்கள்.

மேலும் கூறினார்கள்: அவர் உண்மை கூறும்போது நீங்கள் அடிக்கின்றீர்கள். பொய் பேசும்போது நீங்கள் அவரை விட்டு விடுகின்றீர்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தாமே அந்த அடிமையிடம் மென்மையாக, அந்த படை இப்போது எங்கு இருக்கிறது என்று வினவினார்கள். அதற்கு அவர் இப்போது முன்னெதிரே இருக்கின்ற குன்றுக்கு பின்னாலே உள்ளது என்றார். அந்த படையில் எத்தனை நபர்கள் உள்ளனர் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் வினவினார்கள். அதற்கு அவர், அதிகமானோர் உள்ளனர். ஆனால் முழுமையான எண்ணிக்கை எனக்குத் தெரியாது என்றார்.

அன்னார் கூறினார்கள்: சரி! அப்படி என்றால் ஒவ்வொரு நாளும் அவர்கள் உண்பதற்காக எத்தனை ஒட்டகங்கள் அறுக்கப்பட்டுகின்றன? அவர் கூறினார்: பத்து ஒட்டகங்கள். பத்து ஒட்டகங்கள் அந்த குழுவில் இருப்பவர்களுக்காக அறுக்கப்படுகின்றன என்றால் ஆயிரம் நபர்கள் அவர்களோடு இருக்கின்றனர் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களை நோக்கி கூறினார்கள். உண்மையில் அத்தனை நபர்கள்தான் இருந்தனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 355,356)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சஃலபா பின் அம்ரு அன்ஸாரி ஆவார்கள். ஹஸ்ரத் சஃலபா அவர்கள் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னாரின் தாயாரின் பெயர் கப்ஷா ஆகும். இவர்கள் புகழ்பெற்ற கவிஞரான ஹஸ்ரத் ஹஸ்ஸாம் பின் சாபித் அவர்களின் சகோதரி ஆவார்கள். ஹஸ்ரத் சஃலபா பத்ர் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

அன்னார் பனூ சல்மாவின் சிலைகளை உடைத்த சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். அன்னாரின் மரணம் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஜஸர் போரில் அதாவது பாலத்துப் போரில் ஹிஜ்ரி 14 ஆம் ஆண்டு என்றும் அல்லது திப்ரியில் ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு என்றும் வந்துள்ளது. இந்தப் போர் ஈரானியர்களோடு நடந்ததாகும்.

இந்தப் போரில் இரு தரப்பினரும் அபூ உபைதா அவர்களின் தலைமையில் முஸ்லிம்களின் படையும், பமன் ஜாஸ்விய்யாவின் தலைமையில் ஈரானிய படையும் ஃபுராத் நதியில் நேர்எதிரே வந்தனர். நதியைக் கடந்து சென்று போர் செய்வதற்காக ஒரு பாலம் கட்டப்பட்டது. இந்த அடிப்படையில்தான் இது பாலத்துப் போர் என்று கூறப்பட்டது. சிலரின் பார்வையில் அவர்களின் வஃபாத் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் மதீனாவில் நிகழ்ந்தது.

(ரவ்ஸுல் அன்ஃப் தொகுதி 3 பக்கம் 158,159.. பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல்

குப்ரா தொகுதி 3 பக்கம் 386 சஃலபா பின் மஹ்ஸன் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & தாரீஹ் அத்திப்ரி தொகுதி 2 பக்கம் 366 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & தாரீஹ் இப்னு ஹல்தூன் தொகுதி 2 பக்கம் 522 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் சஃலபா பின் கனமா ஆகும். ஹஸ்ரத் சஃலபாவின் பெயர் ஓர் அறிவிப்பில் சஃலபா பின் அனமா என்றும் வந்துள்ளது. ஹஸ்ரத் சஃலபாவின் தாயாரின் பெயர் ஜஹீரா பின்த் கைன் ஆகும். அன்னார் அன்ஸார்களின் கோத்திரமான பனூ சல்மாவைச் சார்ந்தவர் ஆவார். இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையில் பைஅத் செய்த 70 சஹாபாக்களில் ஹஸ்ரத் சஃலபாவும் அடங்குவார்.

ஹஸ்ரத் சஃலபா ஈமான் கொண்டபோது அன்னார் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் மற்றும் அப்துல்லாஹ் பின் உனைஸ் ஆகியோர் இணைந்து பனூ சலமாவின் சிலைகளை உடைத்தனர். அதாவது தமது கோத்திரத்தின் சிலைகளை உடைத்தனர். அன்னார் பத்ர், உஹது மற்றும் அகழ் போரில் கலந்து கொண்டார்கள். மேலும் அகழ் போரில் ஹுபீரா பின் அபீ வஹப் ஹஸ்ரத் சஃலபாவை ஷஹீதாக்கினான். இன்னொரு அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் சஃலபா அவர்கள் கைபர் போரின்போது ஷஹீதானார்கள் என்று வந்துள்ளது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 435 சஃலபா பின் கனமா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 207 சஃலபா பின் கனமா (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஜாபிர் பின் காலித் ஆவார்கள். ஹஸ்ரத் ஜாபிர் பின் காலித் அன்ஸார் கோத்திரமான பனூ தீனாரைச் சார்ந்தவர் ஆவார்கள். ஹஸ்ரத் ஜாபிர் பின் காலித் பத்ர் மற்றும் உஹது போரில் கலந்து கொண்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 394 ஜாபிர் பின் காலித் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஹாரிஸ் பின் நுஃமான் பின் உமைய்யா அன்ஸாரி ஆவார்கள். ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்கள் அன்ஸார்களின் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் பத்ர் போர் மற்றும் உஹது போரில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். மேலும் அன்னார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் மற்றும் ஹவ்வாத் பின் ஜுபைர் அவர்களின் சிறிய தந்தை ஆவார்கள். ஸஃபைன் போரின்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தரப்பிலிருந்து கலந்து கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 641 ஹாரிஸ் பின் நுஃமான் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸாபா தொகுதி 1 பக்கம் 694 ஹாரிஸ் பின் நுஃமான் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பிறகு ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அனஸ் அன்ஸாரி என்ற சஹாபி ஆவார்கள். இவர்களின் தாயாரின் பெயர் உம்மே ஷரீக் ஆகும். தந்தை அனஸ் பின் ராஃபிஹ் அவர்கள். அன்னாருடைய தாயாரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்கள் அவ்ஸ் கோத்திரத்தின் கிளையான பனூ அப்தே அஷ்அலைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். பத்ர் போர் மற்றும் உஹது போரில் கலந்து கொண்டார்கள். மேலும் உஹது போரில் அன்னார் ஷஹாதத் அந்தஸ்தை பெற்றார்கள். ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்கள் உஹது போரில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் அவர்களோடு ஒரு மலைக்குன்றில் உறுதியாக நின்று சண்டையிட்ட சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். அதில் ஷஹாதத்தை அடைந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 334 ஹாரிஸ் பின் அனஸ் (ரலி), பக்கம் 362 அப்தில்லாஹ் பின் ஜுபைர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 277 உம்மே ஷரீக் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஹுரைஸ் பின் ஸைது அன்ஸாரி ஆவார்கள். ஒரு சஹாபியின் அறிவிப்பில் இவர்களுடைய பெயர் ஸைது பின் சஃலபா என்று வந்துள்ளது. ஹஸ்ரத் ஹுரைஸ் அவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஸைது பின் ஹாரிஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் தமது சகோதரர் ஹஸ்ரத் அப்துல்லாஹ்வோடு பத்ர் போரில் கலந்து கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 717,718 ஹுரைஸ் பின் ஸைது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அவர்களுக்கு பாங்கு பற்றி கனவு காட்டப்பட்டது. அன்னார் உஹது போரிலும் கலந்து கொண்டார்கள். இவர்களின் சகோதரருக்கும் பாங்கு தொடர்பான வார்த்தைகள் கூறப்பட்டது.

பிறகு அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அஸீம்மா ஆகும். ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அஸிம்மாஅன்ஸார்களின் கோத்திரமான பனூ நஜ்ஜாரைச் சார்ந்தவர்கள். பிஃரே மஊனா சம்பவ நாளன்று ஷஹீதானார்கள்.

(இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 292 ஹாரிஸ் பின் அஸிம்மா (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹாரிஸ் மற்றும் யஸ்ரத் சுஹைப் பின் ஸினான் இருவருக்குமிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்தார்கள்.

(அஸாபா தொகுதி 1 பக்கம் 673 ஹாரிஸ் பின் அஸிம்மா (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அஸிம்மா அவர்கள் பத்ர் போருக்காக பெருமானார் (ஸல்) அவர்களோடு கிளம்பினார்கள். ரவ்ஹா என்ற இடத்தை அடைந்தபோது அவர்களிடம் மேலும் பயணிக்கும் ஆற்றல் இல்லாத காரணத்தினால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை மதீனாவிற்கு திருப்பி அனுப்பினார்கள். ஆனால் போரில் கிடைத்த செல்வத்தில் பத்ர் போரில் கலந்து கொண்டவர்களுக்காக எவ்வளவு பங்கு வழங்கப்பட்டதோ அதே அளவு அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

அதாவது வெளிப்படையாக அன்னார் கலந்து கொள்ளவில்லை. ஆனால் ஒரு உத்வேகத்துடன் கிளம்பினார்கள். உடல் இயலாமையினால் நோய்வாய்ப்பட்டிருந்ததால் திருப்பி அனுப்பப்பட்டார்கள். ஆனால் அவர்களின் எண்ணம் மற்றும் ஆர்வத்தைக் கண்டு பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களையும் பத்ர் போர் சஹாபாக்களில் இணைத்துக் கொண்டார்கள். அன்னார்

உஹது போரிலும் கலந்து கொண்டார்கள். அந்த நாளன்று மக்கள் சிதறிச் சென்றபோது ஹஸ்ரத் ஹாரிஸ் உறுதியான பாதத்துடன் நிலைநின்றார்கள். ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் தாமாகவே வந்து மரணத்திற்கான பைஅத்தைச் செய்தார்கள். அன்னார் உஸ்மான் பின் அப்துல்லாஹ் பின் முகைரா மக்ஸூமியை கொலை செய்தார்கள். அதாவது ஹாரிஸ் அவர்கள். பிறகு அவரின் போர் ஆடைகளையும், போர் ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டார்கள். அதில் ஈட்டியும், வாளும் இருந்தன. பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பொருளை அன்னாருக்கே வழங்கினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு உஸ்மான் பின் அப்துல்லாஹ் கொல்லப்பட்ட செய்தி கிடைத்தபோது எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று கூறினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 386 ஹாரிஸ் பின் அஸிம்மா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 615 ஹாரிஸ் பின் அஸிம்மா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அவன் மிக பயங்கரமான எதிரியாக இருந்தான். ஒரு இணைவைப்பாளன் ஆவான். உஹது போரில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக முழுமையான ஆயுதங்களுடன் வந்திருந்தான். உஹது போர் நாளன்று பெருமானார் (ஸல்) அவர்கள் எனது பெரிய தந்தை ஹம்ஸாவிற்கு என்னவாயிற்று? என்று வினவினார்கள்.

ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்களைத் தேடிச் சென்றார்கள். அவர்கள் வரத் தாமதமானபோது ஹஸ்ரத் அலி அவர்கள் சென்றார்கள். ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்களைச் சென்றடைந்போது ஹஸ்ரத் ஹம்ஸா ஷஹீதாகி இருந்தார்கள். இந்த இரு சஹாபாக்களும் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அந்த ஷஹாதத் செய்தியைக் கூறினர்.

ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது போர் நாளில் ஒரு பள்ளத்தாக்கில் இருந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடத்தில் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃபை பார்த்தீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு நான் ஆம்! நான் அவர்களைக் கண்டேன். அவர்கள் ஒரு மலைக்கு அருகில் இருந்தார்கள். அவர்கள் மீது இணைவைப்பாளர்களின் படை தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தது.

அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று நான் அவர்களை நோக்கி சென்றபோது எனது பார்வை உங்கள் மீது பட்டதனால் நான் உங்களிடம் வந்து விட்டேன் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், மலக்குகள் அவரை பாதுகாத்துக் கொண்டிருக்கின்றனர். அதாவது அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃபை மலக்குகள் பாதுகாக்கின்றனர் என்று கூறினார்கள். இன்னொரு அறிவிப்பில் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மலக்குகள் அவருக்கு ஆதரவாகச் சண்டையிடுகின்றனர்.

ஹஸ்ரத் ஹாரிஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களிடம் சென்றேன். போர் முடிவுற்றது. அவர்களுக்கு முன்னர் 7 பேர் கொல்லப்பட்டுக் கிடப்பதை நான் கண்டேன். இவர்கள் அனைவரையும் தாங்களா கொன்றீர்கள் என்று நான் அவர்களிடம் வினவினேன். அதற்கு அப்துர் ரஹ்மான் அவர்கள், இந்த மூன்று பேரை நான் கொலை செய்தேன். ஆனால் மீதமுள்ளவர்கள் தொடர்பாக அவர்கள் யார் கொன்றார் என்று எனக்குத் தெரியாது என்று கூறினார்கள். அதற்கு நான், அல்லாஹ்வும் அவனது தூதரும் உண்மையையே கூறினர். அதாவது மலக்குகள் அவருக்கு உதவினர் என்று கூறினேன்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 615 ஹாரிஸ் பின் அஸிம்மா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹாரிஸ் பிஃரே மவூனா சம்பவத்தில் இருந்தார்கள். அந்த சம்பவம் நடைபெற்றபோது சஹாபாக்கள் ஷஹீதாக்கப்பட்டபோது ஹஸ்ரத் ஹாரிஸ் மற்றும் அம்ரு பின் உமைய்யா ஆகிய இருவரும் ஒட்டகங்களை மேய்ப்பதற்காகச் சென்றிருந்தனர்.

சீரத் இப்னு ஹிஷாமில் அந்த இரண்டு சஹாபாக்கள் அம்ரு பின் உமைய்யா மற்றும் ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது என்று எழுதப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த அறிவிப்பு சில புத்தகங்களின் அறிவிப்புகளில் இருந்தது.

ஒட்டகங்களை மேய விடுவதற்காக சென்றிருந்தவர்கள் திரும்பி தம்முடைய கூடாரத்தின் இடத்தை அடைந்தபோது பறவைகள் அங்கு அமர்ந்திருப்பதைக் கண்டதும், அவர்களோடு வந்திருந்தவர்கள் ஷஹீதாகி விட்டனர் என்பதை புரிந்து விட்டனர். ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்கள் ஹஸ்ரத் அம்ரூவிடம், நீங்கள் என்ன கருதுகின்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அம்ரு அவர்கள், நாம் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் திரும்பிச் சென்று செய்தி தெரிவிக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்கள் முன்ஸிர் கொல்லப்பட்ட இந்த இடத்திலிருந்து நான் பின்வாங்கப் போவதில்லை என்று கூறியவாறு அன்னார் முன்னேறிச் சென்று சண்டையிட்டவாறு அன்னார் ஷஹீதானார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 439 ஹதீஸ் பிஃரே மவூனா – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹாரிஸ் அவர்கள் எதிரிகள் தரப்பிலிருந்து தொடர்ந்து வீசப்பட்ட அம்புகளின் காரணமாக ஷஹீதானார்கள். அந்த அம்புகளின் அவர்களின் உடலை துளைத்ததன் காரணமாக அன்னார் ஷஹீதானார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 615 ஹாரிஸ் பின் அஸிம்மா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் இந்த அனைத்து பத்ர் போர் சஹாபிகளின் அந்தஸ்தை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே செல்வானாக.


*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.



**திருக்குர்ஆனிலிருந்து....**

மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால் நீங்கள் எல்லா வித ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)

**ஃபைஸல் ஹமீது இலாஹி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 14 March 2019 Issue No. 11

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

கூறினர். பிறகு மாலைப்பொழுதில் அந்த பெரியவர் வீட்டிற்குச் சென்றதும் அந்த நபர் ஆயிரம் ரூபாயை அவரிடம் கொண்டு வந்தார். மேலும் அந்த நபர், தாங்கள் அனைவருக்கு முன்பும் என்னைப் புகழ்ந்து மறுமையில் கிடைக்கக்கூடிய நற்கூலியிலிருந்து என்னைப் பாக்கியமற்றவராக ஆக்கி விட்டீர்கள். எனவேதான் நான் இந்த சாக்குப்போக்கை கூறினேன். இப்போது இந்தப் பணம் உங்களுடையது. ஆனால் நீங்கள் எவருக்கு முன்பாகவும் என் பெயரைக் கூறாதீர்கள் என்று கூறினார்.

அந்த பெரியவர் அழத் துவங்கினார். மேலும், இப்போது மக்கள் கியாமத் வரைக்கும் ஏசிப் பேசவே செய்வர். ஏனென்றால் நேற்றைய சம்பவம் அனைவருக்கும் தெரியும். ஆனால் நீங்கள் எனக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தது யாருக்கும் தெரியாது என்று கூறினார். ஒரு இறையச்சமுடையவர் தீமையைத் தூண்டக்கூடிய தமது நஃப்ஸிற்கு எதிராகப் போர் செய்து தமது எண்ணத்தை மறைக்கின்றார். மேலும் அதனை மறைமுகமாக வைக்கின்றார். ஆனால் அல்லாஹ் இந்த மறைமுகமான எண்ணத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். எவ்வாறு ஒரு தீயவர் தாம் செய்த தவறினால் மறைமுகமாக இருக்க விரும்புகின்றாரோ அவ்வாறே ஓர் இறையச்சமுடையவர் மறைவாகத் தொழுகின்றார்.

ஆனால் எவரும் தம்மைப் பார்த்து விடக்கூடாது என்று அவர் அஞ்சுகின்றார். உண்மையான இறையச்சமுடையவர் ஒரு விதமான மறைவையே விரும்புகின்றார். இறையச்சத்தின் வழிகள் பல வகையாகும். ஆனால் இறையச்சத்தை மேற்கொள்வதற்கு துன்பத்தை மேற்கொள்ள வேண்டியது வருகிறது. மேலும் இறையச்சமுடையவர் போர் செய்து கொண்டிருக்கும் நிலையில் இருக்கின்றார். மேலும் நல்லடியார் இதிலிருந்து வெளியே இருக்கின்றார்.

### சூழ்ச்சி மற்றும் சகிப்புத்தன்மைக்கிடையே போர்

சில நேரங்களில் சூழ்ச்சி மற்றும் சகிப்புத்தன்மைக்கிடையே போர் நடைபெறுகின்றது. சில நேரங்களில் மனிதனின் கோபம் இறை வேதத்திற்கு எதிராக இருக்கிறது. ஏச்சுப் பேச்சுகளை கேட்டு அவனது மன எழுச்சி பொங்கி எழுகிறது. ஆனால் இறையச்சமானது கோபத்திலிருந்து விலகி இரு என்று அவனுக்கு கற்றுக் கொடுக்கிறது. திருக்குர்ஆன் கூறுகிறது:

وَاِذَا مَرُّوْا بِاللَّغْوِ مَرُّوْا كِرَامًا (31:73)

பொறுமையின்மையுடன்தான் அவனுக்கு பெரும்பான்மையானயான நேரங்களில் போர் செய்ய வேண்டியது வருகிறது. பொறுமையின்மை என்பது என்னவென்றால், அவனுக்கு இறையச்சத்தை மேற்கொள்வதில் எந்த அளவுக்கு நெருக்கடி இருக்கின்றதென்றால் அவன் மிகவும் கஷ்டப்பட்டு தமது நோக்கத்தை, இலக்கைச் சென்றடைகின்றான். எனவே அவன் பொறுமையற்றவனாகி விடுகின்றான். உதாரணமாக, ஒரு கிணற்றை ஐம்பது அடி வரை தோண்ட வேண்டும். ஆனால் இரண்டு அல்லது நான்கு அடி தோண்டிய பிறகு விட்டு விட்டால் இது வெறும் ஒரு தவறான எண்ணமே ஆகும். இறையச்சத்தின் நிபந்தனை என்னவென்றால், அல்லாஹ் வழங்கிய கட்டளைகளைக் கடைசி வரை மேற்கொள்ள வேண்டும். மேலும் பொறுமையற்றவனாக ஆகி விடக்கூடாது.

### நேர்வழியில் அருளுக்குரிய இரண்டு பிரிவினர் அடியெடுத்து வைக்கின்றனர்

நேர்வழியில் அருளுக்குரிய இரண்டு பிரிவினர் அடியெடுத்து வைக்கின்றனர். ஒரு பிரிவினர், பெரிய பெரிய விஷயங்களில் அடியெடுத்து வைக்கக் கூடியவர்கள் ஆவர். உதாரணமாக, ஷரீஅத்தின் கட்டளைகளைப் பேணி நடக்கின்றனர். மேலும் அவர்கள் இரட்சிப்பைப் பெற்றனர். மற்றொருவர் பிரிவினர், அவர்கள் முன்னே காலெடுத்து வைத்தனர். மேலும் அதிலிருந்து ஒருபோதும் ஓயவில்லை. மேலும் அவர்கள் அதில் முன்னேறிக் கொண்டே இருந்தனர். எதுவரையென்றால் அவர்கள் தமது இலக்கை அடைந்து விட்டனர்.

ஆனால் இவர்களில், பெரிய பெரிய விஷயங்களைப் பேணுவதில் தமது பாதங்களை முன்னெடுத்து வைத்து தமது இலக்கை அடையாதவர்கள்தான் தமது நோக்கத்தை அடையாத பிரிவினர் ஆவர். அவர்கள் நிச்சயமாக நாத்தீகர்களாக ஆகி விடுகின்றனர். சில மக்கள் கூறுகின்றனர். அதாவது நாங்கள் தொழவும் செய்கின்றோம். சில்லா கஷியும் செய்கின்றோம். ஆனால் எங்களுக்கு எந்தப் பயனும் ஏற்படவில்லை. மன்ஸூர் மஸீஹ் என்ற நபர் கிறித்தவரானதற்குரிய காரணம் என்னவென்றால், அவர் தான் பின்பற்றக்கூடியவரிடம் சென்று பல நாட்கள் அவருடன் இருந்தார். ஆனால் அது அவருக்கு எந்தப் பயனையும் தரவில்லை. எனவே அவர் தவறான எண்ணம் கொண்டு கிறித்தவராகி விட்டார்.

### உண்மை மற்றும் பொறுமை

ஆக எவர் ஒருவர் பொறுமையின்மையை வெளிப்படுத்துவாரோ அவர் ஷய்த்தானின் பிடியில் வந்து விடுகின்றார். எனவே இறையச்சமுடையவர் பொறுமையின்மையுடனும் போர் செய்கின்றார். புஸ்தானில் ஓர் இறை அடியாரைப் பற்றி இவ்வாறு வருகிறது. அதாவது அவர் எப்போது இறைவணக்கம் செய்தாலும் வானவர் அவரிடம், நீ நிராகரிக்கப்பட்டு விட்டாய், இழிவுபடுத்தப்பட்டு விட்டாய் என்றே பதில் பதில் கூறி வந்தார்.

ஒரு முறை ஒரு சீடர் இந்த ஓசையைக் கேட்டு விட்டு இப்போது தீர்ப்பு வந்து விட்டது. குனிந்து எழுவதனால் என்ன பயன் ஏற்படப்போகிறது? அவர் அதிகமாக அழுதார். மேலும் கூறினார்: நான் அந்த இறைவனை விட்டு விட்டு எங்கே செல்வேன்? நான் சபிக்கப்பட்டவனாக இருக்கின்றேன் என்றால் அவ்வாறே இருந்து இருந்து விடுகிறேன். என்னைச் சபிக்கப்பட்டவன் என்றாவது கூறப்படுகிறதே! இந்த விஷயங்கள் அந்த சீடரிடம் அவர் எடுத்துக் கூறிக் கொண்டுதான் இருந்தார். அதற்குள் அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டார் என்ற ஓசை வந்தது. எனவே இவை அனைத்தும் உண்மை மற்றும் பொறுமையின் விளைவே ஆகும். இது ஓர் இறையச்சமுடையவருக்கு நிபந்தனையாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி **1** பக்கம் **14–16**)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad